O.S.No. 80/2013 – Date : 02.04.2026

DW1 – பிரகாஷ்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன் என்றால் சரி. எத்தனை வருடமாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் 20 வருடமாக செய்து வருகிறேன். எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வாதிகளை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

தாவா சொத்தை நான் எந்த வருடம் கிரயம் பெற்றேன் என்றால் 10.05.1989ல் கிரயம் பெற்றேன். தாவா சொத்தை நானும் மந்திரியும் சேர்ந்து கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரி. மேற்படி கிரய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கையில் மேற்படி கிரய ஆவணத்தை குறிப்பிடவில்லை என்றால் சரி. என்னிடம் காண்பிக்கப்படும் கிரய ஆவணம்தான் மேற்படி கிரய ஆவணம் என்றால் சரி. மேற்படி கிரய பத்திரத்தை வையாபுரி, சின்னதம்பி,

ஜெயகோபால், பூபதி, தமிழழகன், சித்ரா, தேன்மொழி, ஸ்ரீதரன், ராமஜெயம், தனபால், சரவணன், தனலட்சுமி, பத்மாவதி, பாலாஜி, கலைவாணி, சத்தியமூர்த்தி, ராம்குமார், கலைவாணன், மதிவாணன், ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரி. மேற்படி கிரயப்பத்திரத்தில் டி.வி.ராமன் மற்றும் வையாபுரியின் சொத்துக்களை கிரயம் பெற்றேன் என்றால் சரி. 31.08.1984 தேதியிட்ட பத்திரத்தின்படி டி.வி.ராமனுக்கு பாத்தியப்பட்ட சொத்தைதான் நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரி. இதில் டி.வி.ராமனுக்கு சரவே எண்.9/2ஏ-யில் 1 ஏக்கர் 26 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரி. வையாபுரியிடம் எவ்வளவு சொத்து கிரயம் பெற்றேன் என்றால் ஒன்னரை ஏக்கருக்கு மேல் கிரயம் பெற்றேன். டி.வி.ராமன் மற்றும் வையாபுரியிடம் மொத்தம் எவ்வளவு ஏக்கர் கிரயம் பெற்றேன் என்றால் 4 ஏக்கருக்கு மேல் கிரயம் பெற்றேன்.

எனது பிரமாண பத்திரிக்கையில் பவர் மூலமாக சொத்தை கிரயம் பெற்றேன் என்று சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். அந்த பொது அதிகாரப்பத்திரத்தின்படி கிரயம் பெற்றேன் என்று நான் வாங்கிய கிரயப்பத்திரத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். என்னுடைய கிரயப்பத்திரத்தில் பூபதி என்பவர் பவர் மூலமாக கிரய சொத்தை விற்றேன் என்று எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பவர் பத்திரத்தில் 3ம் வாதி விஜயலட்சுமியும் 4ம் வாதி தனபாக்கியமும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய கிரயப்பத்திரத்தில் வாதி முருகேசன், வெள்ளியங்கிரி, விஜயலட்சுமி, தனபாக்கியம் ஆகியோர் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல, கையெழுத்து போட்டுள்ளார்கள்.

மேற்படி கிரயப்பத்திரத்தில் வாதி முருகேசன், வெள்ளியங்கிரி, விஜயலட்சுமி, தனபாக்கியம் ஆகியோர் கையெழுத்து செய்யவில்லை என்றும் கையெழுத்து செய்துள்ளதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை கிரயம் பெறும்போது பொது அதிகாரப்பத்திரத்தின் சொத்து விவரத்தில் உள்ள அனைத்து சொத்துக்களையும் கிரயம் பெற்றேன் என்றால் சரி. நான் வாங்கிய கிரயப்பத்திரத்தில் சர்வே எண்.9/2ஏ2ல் டி.வி.ராமனுக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 10 செண்ட் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

கிரயப்பத்திரத்தில் டி.வி.ராமன் 1 ஏக்கர் 10 செண்டில் 35 செண்ட் விற்றது போக மீதமுள்ள 75 செண்ட் நிலத்தைதான் நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரி. பவர் பத்திரத்தின் அடிப்படையில் பூபதி யாருக்காவது பிளாட் விற்றுள்ளாரா என்றால் இல்லை. பூபதி எப்போது காலமானார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

நான் சொத்தை கிரயம் வாங்கும்போது பிளாட் போடுவதற்காக நிரவி வைத்திருந்த சொத்தைதான் கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல, விவசாய நிலமாக இருந்த சொத்தைதான் கிரயம் பெற்றேன். நான் சொத்தை வாங்கி பிளாட் போட்டு விற்றேனா என்றால் விற்றேன். வீட்டு மனைகளுக்கு அப்ரூவல் வாங்கி உள்ளேனா என்றால் வாங்கி உள்ளேன். அப்ரூவல் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

சொத்தை விற்பது சம்மந்தமாக வாதிகளிடம் பேசினேனா என்றால் பேசினேன். அவர்களிடம்தான் தொகை கொடுத்துள்ளேன். சொத்து சம்மந்தமாக நான் வாதிகளிடம் பேசவில்லை என்றும் பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. டி.வி. ராமனுக்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள். டி.வி.ராமனின் முதல் மனைவி பெயர் மாரக்காள் என்றால் ஞாபகமில்லை. டி.வி.ராமனின் முதல் மனைவியின் வாரிசுகள்தான் 1 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரி. டி.வி.ராமனின் 2வது மனைவி பெயர் தனபாக்கியம் என்றால் சரி. அவருடைய வாரிசுகள்தான் 1 முதல் 4 வாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதி என்றால் சரி. நான் சொத்தை வாங்கும்போது மேற்படி விவரம் தெரிந்துதான் வாங்கினேன் என்றால் சரி. தாவா சொத்தில் வாதிகளுக்கு சரி பாகம் உள்ளது என்றால் அது அவர்களுடைய விருப்பம், எனக்குத் தெரியாது. தாவா சொத்தை பூபதியிடமும் வையாபுரியிடமும்தான் வாங்கினேன் என்றால் சரி.

நான் வாங்கிய கிரயப்பத்திரத்தில் 1 முதல் 4 வாதிகளும் 8ம் பிரதிவாதியும் கையெழுத்து செய்யவில்லை என்பதால் அவர்கள் தங்களது பாகத்தை எனக்கு விற்கவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் பத்திரத்தில் கையெழுத்து செய்யவில்லை, அதனால் அவர்கள் எனக்கு விற்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் யாரும் கிரயப்பத்திரத்தில் கையெழுத்து போடவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தாவாப்படி பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் கிரயம் பெற்ற கிரய

ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரி. அது வா.சா.ஆ.4 ஆகும்.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.